**கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டம் - 2022**

**.......................................................................................................................**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமான கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தைத் தவிர்த்து திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாகப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புபட்ட நிருவகிக்கும் தரப்பினர்களின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது திட்டத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது திட்டத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்நியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16 (1)ஆம் உப பிரிவின் பிரகாரம் திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இரக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக திட்டத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் திட்டத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது திட்டத்தின் கட்டுப்பாட்டு திட்டத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,
- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,
- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடான இணக்கமின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | தளபாடங்களும் பொருத்திகளும், அலுவலக உபகரணங்கள், கணனிகள் போன்ற ரூபா 696,175 பெறுமதியான முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்கள் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றினை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 08 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தளபாடங்களும் பொருத்திகளும், துணைக் கருவிகள், அலுவலக உபகரணங்கள் முதலியன பயன்படுத்தப்பட்டிருந்தும் அவற்றினை மதிப்பீடு செய்து வினைத்திறனான ஆயுட் காலத்தினை கணிப்பீடு செய்ய முடியாதிருந்தது. பல சொத்துக்கள் அகற்றப்பட வேண்டிய நிலையில் காணப்பட்டதுடன் கணனி போன்ற உபகரணங்கள் நாளதுவரையாக்கக் கூடிய நிலையில் காணப்படவில்லை. இச்சொத்துக்கள் முழுமையான செயற்திறனுடன் பயன்படுத்தக்கூடிய நிலையில் காணப்படாததனால் எதிர்காலத்தில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயன்படுத்தப்பட்டு வருகின்ற முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 59 ஆம் பந்தியின் பிரகாரம் இத்திட்டத்தின் செயற்திறனான பங்களிப்பாளர்கள் மற்றும் கடற்றொழில் ஓய்வூதியக்காரர்களின் ஓய்வூதியப் பொறுப்புக்களுக்காக ஆயுள் கணிப்பு மதிப்பீட்டினை காலரீதியாக மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2007 ஆம் ஆண்டின் பின்னர் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்த ஆயுள் கணிப்பு மதிப்பீடானது மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு செயற்திறனான பங்களிப்பாளர்கள் மற்றும் கடற்றொழிலாளர்களின் ஓய்வூதியப் பொறுப்பு ரூபா 5,068,050,746 ஆகும். | ஆயுள் கணிப்பு மதிப்பீட்டினை 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அது பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | ஓய்வூதியப் பொறுப்பானது ஆயுள் கணிப்பு மதிப்பீட்டின் பிரகாரம் காலரீதியாக கணிப்பீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணககாய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | கடற்றொழிலாளர் ஓய்வூதியத் திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரித்த பதவியினர் இல்லாதிருந்த போதிலும் சபையின் தலைவரின் பிரத்தியேக செயலாளர், தம்புத்தேகம மாவட்ட அலுவலகத்தின் மாவட்ட உதவியாளர், மன்னார் மாவட்ட அலுவலக முகாமைத்துவ உதவீ உத்தியோகத்தர் ஆகியோரை சேவையில் ஈடுபடுத்தி அந்த மூன்று நபர்களுக்கும் சம்பளமாக மொத்தமாக ரூபா 2,209,812 செலுத்தி திட்டத்தின் செலவுகளாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த உத்தியோகத்தர்கள் திட்டத்தின் கடமைகளுக்காகவே சேர்த்துக்கொள்ளப்பட்டனர். நிகழ்காலத்தில் ஏனைய கடமைகளில் ஈடுபடுவதுடன் ஏனைய உத்தியோகத்தர்களும் இத்திட்டத்தில் ஈடுபடுகின்றார்கள். இந்த உத்தியோகத்தர்களின் சம்பளம் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. போதியளவு பதவியணியினர் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின்னர் திட்டத்திற்குரிய ஊழியர்களின் சம்பளத்தை திட்டத்தில் உள்ளடக்குவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்படாத பதவிகளுக்காக ஆட்களை சேர்த்துக் கொள்ளல் மற்றும் சம்பளம் செலுத்துதல் இடம்பெறாதிருத்தல் வேண்டும். |
| (ஆ) | 2019 ஆம் ஆண்டிலிருந்து முன்கொண்டு வந்த ரூபா 98,000 தொகையான மரணப் பணிக்கொடை நிதியத்திலிருந்து செலுத்த வேண்டிய மீதி 2020 ஆம் ஆண்டில் தீர்த்துவைக்கப்பட்டிருந்தும் அந்த தீர்த்துவைத்தலானது பிழையாகக் கணக்குவைக்கப்பட்டதனால் மீதியானது மீளாய்வாண்டின் போதும் முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | இப்பணம் மரணப்பணிக்கொடை நிதியத்தினூடாகவும் கடற்றொழிலாளர் நிதியத்தினூடாகவும் செம்மையாக்கப்பட்டு 2023 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் போது சரியாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | இடம்பெற்ற பிழையினை உடனடியாக சரிசெய்தல் வேண்டும். |

### 1.5.3 நிதியம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திட்டத்தின் மொத்த சொத்துக்கள் ரூபா 663,412,060 ஆகவும் மொத்த பொறுப்புக்கள் ரூபா 5,140,628,886 ஆகவும் காணப்பட்டதுடன் சொத்துக்களை மிகைத்த பொறுப்புக்கள் ரூபா 4,477,216,826 ஆகும். இந்த சாதகமற்ற நிலைமையானது | இத்திட்டமானது சுய நிதி அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படாததுடன் தவணைப் பணத்தினை தீர்மானிக்கும் போது அரசாங்க நிவாரணத்திற்கு உட்படுவதனால் இந்நிலைமை உருவாகியுள்ளது. அதற்கிணங்க வருடாந்தம் | திட்டத்தினை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| திட்டம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல் தொடர்பாக பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. | செலுத்த வேண்டிய ஓய்வூதியப் பொறுப்பு அதிகரித்துச் செல்வதுடன் அதன் காரணமாக தேறிய சொத்துக்களின் பெறுமதியும் குறைவடையும் அக்காரணத்தினால் இத்திட்டத்திற்காக புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்தல் முன்னேற்றமடைந்திருக்கவில்லை. |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| 1990 இன் 23 ஆம் இலக்க கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்ட அதிகாரச் சட்டம் | | | |
| (அ) 5 (1) ஆம் பிரிவு | 18 வயதுக்கும் 59 வயதுக்கும் இடைப்பட்ட கடற்றொழிலாளர் எவரினையும் இந்த கடற்றொழில் ஓய்வூதியத்திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு தகமை இருந்தும் 2018 ஆம் ஆண்டின் பின்னர் திட்டத்திற்கு கடற்றொழில் ஓய்வூதிய அங்கத்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை . | கடற்றொழில் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு நலத்திட்டத்தினை நிதிச் சாத்தியத்துடன் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.அதற்காக கணனி தரவு முறைமை தயாரிக்கப்பட்டு வருகின்றது. திட்டத்திற்கு கடற்றொழிலாளர்களை கவரச்செய்வதற்காக 2023 ஆம் ஆண்டின் போது கடற்றொழில் அமைச்சுடன் ஒன்றிணைந்து புதிய ஒரு திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | திட்டத்தினை செயற்படச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 7 ஆம் பிரிவு | திட்டத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற கடற்றொழிலாளர்கள் 60 வயதினைப் பூர்த்தியடைந்த உடன் ஓய்வூதியம் வழங்கும் நடைமுறை இல்லாமையின் காரணமாக திட்டத்திற்கு பங்களிப்பினை வழங்கியுள்ள 64,117 கடற்றொழிலாளர்களுக்கு | | |

நலன்களை வழங்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| (i) நலனுக்காக விண்ணப்பிக்க வேண்டும் என்ற மற்றும் விண்ணப்பிக்க வேண்டிய முறைமை தெரியப்படுத்த வேண்டும் என்ற நடைமுறை இல்லாதுள்ளமை இதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு திட்டத்திற்கு பங்களிப்புச் செய்து 60 வயதினை மிகைத்த 27,976 கடற்றொழிலாளர்களில் 22,402 கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் ஓய்வூதிய நலன்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதன் சதவீதமானது மீளாய்வாண்டின் இறுதியில் 60 வயதினைப் பூர்த்தியடைந்த மொத்த பங்களிப்பாளர்களில் 80 சதவீதமாகும். | 60 வயது பூர்த்தியடைந்துள்ள பங்களிப்பாளர்களின் பட்டியலானது ஒவ்வொரு மாவட்ட அலுவலகத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அந்த பட்டியலை அடிப்படையாகக் கொண்டு ஓய்வூதியத்திற்கு தகமையுள்ள கடற்றொழிலாளர்களுக்குத் தெரியப்படுத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திட்டத்திற்குரிய செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற கடற்றொழில் மற்றும் நீர் வளங்கள் திணைக்களத்திற்கு இது தொடர்பாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மேலம் மாவட்ட கடற்றொழில் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்கின்ற தெரியப்படுத்துதல்களுக்கு மேலதிகமாக பத்திரிகை அறிவித்தலின் மூலம் கடற்றொழிலாளர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதிபலன்களுக்கு தகமையுள்ள கடற்றொழிலாளர்களை இனங்கண்டு தெரியப்படுத்தும் நடைமுறை தயாரிக்கப்பட்டு ஓய்வூதியத்திற்கு தகமை பெறும் திகதியிலிருந்து அதனை வழங்குவதற்கு நடைமுறைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ii) ஒரு பங்களிப்பாளர் 60 வயதினைப் பூர்த்தியடைந்த திகதியிலிருந்து அவர் ஓய்வூதியத்திற்கு தகமை பெறுகின்ற போதிலும் திட்டத்தினால் நிலுவையாகவுள்ள ஓய்வூதியப் பணத்தினை செலுத்தாது ஓய்வூதியம் தயாரிக்கப்பட்ட திகதியிலிருந்து கொடுப்பனவு செய்தல். இதன் காரணமாக 2009 சனவரியிலிருந்து 2016 திசெம்பர் வரையான | தாமதமடைந்து கிடைத்துள்ள விண்ணப்பப் படிவங்கள் தாமதமடைந்தமைக்கான காரணங்கள் தெரியப்படுத்தும் வரை நிலுவையான ஓய்வூதியங்களைச் செலுத்துதல் இடம்பெறவில்லை. தற்பொழுது நிலுவையான ஓய்வூதியங்களுடன் ஓய்வூதியக் கொடுப்பனவு இடம்பெறுகின்றது. | ஓய்வூதியத்திற்காக தகமை பெறும் திகதியிலிருந்து ஓய்வூதியப் பணம் செலுத்தப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காலத்திற்காக ஓய்வூதியம் வழங்கிய 137 கடற்றொழிலாளர்களுக்கு ரூபா 4,063,063 தொகையும் 2022 ஆம் ஆண்டின் போது ஓய்வூதியம் வழங்கிய 83 கடற்றொழிலாளர்களுக்கு ரூபா 1,675,851 ஆக மொத்தமாக ரூபா 5,738,917 நிலுவையான ஓய்வூதியப் பணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் கடற்றொழிலாளர்களுக்குச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| | | (iii)விண்ணப்பித்த கடற்றொழிலாளர்களுக்கு ஓய்வூதிய நலன்கள் தயாரிக்கப்பட்டு நலன்களை வழங்குவதற்கு 60 வயதினைப் பூர்த்தியடைந்து 1 மாதத்திலிருந்து 7 ஆண்டுகள் வரையான காலம் தாமதிக்கப்பட்டிருந்தது. | பதில் வழங்கப்படவில்லை. | ஓய்வூதியத்திற்கு தகமைபெற்ற திகதியிலிருந்து வழங்குவதற்கான நடைமுறைகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | 16 ஆம் பிரிவு | இத்திட்டத்தின் பங்களிப்புப் பணத்தை செலுத்தும் போது தொடர்ச்சியாக பத்து தவணைகளுக்கு தவணைப் பணங்களை முறையாக செலுத்தாமையின் அடிப்படையில் ஒரு பங்களிப்பாளருக்கு நலன்கள் இழக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அது பற்றி பங்களிப்பாளருக்கு தெரிவிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு தெரியப்படுத்துதல் இடம்பெற்றிருக்கவில்லை. | | |

| | | |
|---|---|---|
| (i) அதன் காரணமாக 60 வயதினைப் பூர்த்தி செய்து ஓய்வூதியத்தினை வேண்டி கடந்த ஆண்டின் போது 42 நபர்களும் மீளாய்வாண்டின் போது 41 நபர்களும் சமர்ப்பித்த விண்ணப்பப் படிவங்களானது தவணைப் பணத்தினை முறைப்படியாகச் செலுத்தாமையின் அடிப்படையில் நலன்களை இழந்திருந்தனர். | ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் போது வழங்கப்படுகின்ற ஓய்வூதிய உறுதியில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பங்களிப்பாளர்களிடமிருந்து மாவட்ட கடற்றொழில் விரிவாக்கல் உத்தியோகத்தர்களின் மூலம் பங்களிப்பு பணம் அறவிடப்படுவதுடன் அப்பங்களிப்பாளர்கள் பங்களிப்பு இரத்துச்செய்யப்பட்டவரா என்பதனை தேடிப்பார்த்து தவணைப் பணத்தினை அறவீடு செய்வது சம்பந்தமாக தேவையான ஆலோசனைகளை தொடர்ச்சியாக அவர்களுக்கு வழங்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்ச்சியாக பத்து தவணைப் பணங்களை முறைப்படியாக செலுத்தாமையின் அடிப்படையில் நலன்கள் இழக்கப்பட்டமை தொடர்பாக பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 60 வயதினைப் பூர்த்தி செய்திருக்காது தவணைப் பணத்தினைச் செலுத்தி திட்டத்தில் பங்களிப்பினை பெற்றுக்கொண்ட 24,867 பங்களிப்பாளர்கள் இருக்கின்ற போதிலும் கணக்காய்வுத் திகதி வரை செயற்திறனாக தவணைப் பணத்தினை செலுத்தி பங்களிப்புச் செய்கின்ற கடற்றொழிலாளர்களின் எண்ணிக்கை 120 ஆகும். மாவட்ட கடற்றொழில் அலுவலகங்களில் கடற்றொழில் பரிசோதகர்கள் உதவி பணிப்பாளர்கள், இலிகிதர்கள் ஆகிய உத்தியோகத்தர்களுக்கு ஒரு தவணைப் பணத்திற்கு ரூபா 11 வீதம் தரகுப் பணம் வழங்கப்பட்டிருந்தும் | ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்யும் போது வழங்கப்படுகின்ற ஓய்வூதிய உறுதியில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் பங்களிப்பாளர்களிடமிருந்து மாவட்ட கடற்றொழில் வரிவாக்கல் உத்தியோகத்தர்களின் மூலமே தவணைப் பணம் அறவீடு செய்யப்படுவதுடன் அப்பங்களிப்பாளர் பங்களிப்பு இரத்துச்செய்யப்பட்டவரா என்பதனை தேடிப்பார்த்து தவணைப் பணத்தினை அறவீடு செய்வது சம்பந்தமாக தேவையான அறிவுறுத்தல்களை தொடர்ச்சியாக அவர்களுக்கு வழங்குவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்ச்சியாக பத்து தவணைப் பணங்களைச் செலுத்தாததன் அடிப்படையில் நலன்கள் இழக்கப்படுகின்றமை தொடர்பாக பங்களிப்பாளர்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கடற்றொழிலாளர்களுக்கு ஓய்வூதிய நலன்கள் இழக்கப்பட்ட காரணம் தொடர்பாக அந்த உத்தியோகத்தர்களால் கடற்றொழிலாளர்களுக்கு தெரியப்படுத்தியிருக்கவில்லை. | | |
| (ஈ) | 20 ஆம் பிரிவு | திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஆலோசனைக் குழு 2016 நவம்பர் மாதத்தின் பின்னர் இன்று வரை கூடியிருக்கவில்லை. | திட்டத்தின் புதிய ஆட்சேர்ப்புக்களை 2023 ஆம் ஆண்டின் போது மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் ஆலோசனைக் குழுவை இந்த ஆண்டில் கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் ஆலோசனைக் குழு கூடுதல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 406,060,646 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 427,806,225 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 21,745,579 பற்றாக்குறையில் குறைவு அவதானிக்கப்பட்டது. இந்த பற்றாக்குறையில் குறைவுக்கு மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் முன்னைய ஆண்டினைவிட ரூபா 67,310,123 ஆல் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது